DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 30/2022 |
| Police Station | Thiruppachethi P.S |
| Deposition of Witness for | LW.9/PW.10 |
| Name | சக்தி |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2 absent. petition filed and allowed.A1, A3 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 09.02.2024 at**11.13**a.m

**முதல் விசாரணை:**

நான் ஆவரங்காடு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலிவேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஆவாரங்காட்டிலிருந்து திருப்பாச்சேத்திக்கு ஆட்டோவில் சென்றுகொண்டிருந்தேன். புஸ்பம் வீடும், கருத்தப்பாண்டி வீடும்அருகருகே உள்ளது. இருவருக்கும்வாய்தகராறு நடந்தது. அதைபார்தது நான் ஆட்டோவை விட்டு இறங்கினேன். கருத்தப்பாண்டி, அவரது மனைவி, அவரது தாயார் மூன்று பேரும் புஸ்பத்தை அருவாளால் வெட்டினார்கள். அதில் புஸ்பத்திற்கு கை, காலில் பலத்த காயம் ஏற்பட்டது, உடம்பிலும் காயம் ஏற்பட்டது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கும் போது கூட்டமாக இருந்தது. சர்மிளா, மலைச்சாமி, நான், இன்னொரு பக்கத்து வீட்டு பெண் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டோம். பின்னர் ஆட்டோ வந்தது, அதில் காயம்பட்ட புஸ்பத்தை ஏற்றிவிட்டோம். சம்பவத்தை செய்து விட்டு எதிரிகள் வெளியே ஓடிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குு.வி(3ம் எதிரி தரப்பில்)

என்னை போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. திருப்பாச்சேத்தி காவல் நிலையத்திற்கு வரவழைத்து தான் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணை செய்த போது முதல் விசாரணையில் சொன்னதை தான் சொன்னேனா என்றால் இதே தான் சொன்னேன். வேறு விசயங்களை குறிப்பிட்டு யார் யார் எதைக் கொண்டு தாக்கினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆட்டோவில் வந்ததாக சொன்னீர்களே அதன் ஆட்டோ எண், அதை யார் ஓட்டி வந்தார், அதில் எத்தனை பேர் வந்தோம் என்பதை போலீசாரிடம் சொன்னேனா என்றால் விசாரணையில் சொல்லவில்லை. ஆட்டோவிலிருந்து சத்தம் கேட்டு அதில் பயணம் செய்த எல்லாரும் பார்த்தோம் என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு சம்பவ இடத்தில் சுமார் 50 நபர்கள் நின்றுகொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 50 நபர்கள் சண்டையை விலக்கி விட்டார்களா என்றால் சுமார் 5, 6 நபர்கள் சண்டையை விலக்கி கொண்டிருந்தார்கள். சண்டையை விலக்கிய 5, 6 நபர்களின் பெயர்கள் மற்றும் விலாசம் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கும் போது வாய்தகராறு தான் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. கருத்தப்பாண்டி வீடும் வீரபாண்டி வீடும் எந்த திசை நோக்கி உள்ளது என்றால் இருவரின் வீடுகளின் கதவுகளும் வடக்கு திசையில் தான் உள்ளது. புஸ்பம் எனக்கு என்ன உறவுமுறை என்றால் தங்கை முறை ஆகும். கருத்தப்பாண்டியின் வீட்டை சுற்றி முள்வேலி உள்ளது தெரியுமா என்றால் தெரியும். நான் பார்க்கும் போது சம்பவம் எங்கு நடந்து கொண்டிருந்தது என்றால் எதிரி வீட்டிற்கும் புஸ்பம் வீட்டிற்கும் நடுவில் தான் வாய்தகராறு நடந்து கொண்டிருந்தது என்றால் சரியல்ல. சர்மிளா என்ன உறவு என்றால் தங்கை முறை, மலைச்சாமி எனக்கு மாமா முறை ஆகும். 3ம் எதிரி லட்சுமிக்கும் அவரது மகன் வீரபாண்டிக்கும் சொத்து சம்பந்தமாக பேச்சு வார்த்தை இல்லை என்று தெரியுமா என்றால் தெரியும். எதிரி லட்சுமி கணவர் இறந்த பிறகு மானாமதுரையில் தற்போது வரை குடியிருந்து வரும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை

என்றும், சம்பவம் பற்றி நான் பார்க்கவில்லை என்றும், புஸ்பம் எனது நெருங்கிய தங்கை முறை என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் சுமார் அரை மணிநேரம் நடந்திருக்குமா என்றால் எவ்வளவு நேரம் சண்டை நடந்தது என்று எனக்கு தெரியாது, வெட்டியதை மட்டும் நான் பார்த்தேன். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**